செய்தி வெளியீட்டு எண்.553 நாள்: 5.7.2010

**<u>பள்ளிக் கல்வித்துறையில் கருணை அடிப்படையில் பணி நியமன ஆணையினை மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.</u>**

**விருதுநகர் மாவட்டம், சாத்தூர் காவல் நிலையத்தில் முதல்நிலை காவலராகப் பணிபுரிந்த திரு. நாகரத்தினம் என்பவர் 27.04.2010 அன்று பாதுகாப்பு பணியிலிருந்தபோது குமார் என்ற ரவுடியால் படுகொலை செய்யப்பட்டதால், வறுமை நிலையில் இருக்கும் குடும்பத்தினை காப்பாற்றும் பொருட்டு, அன்னாரது மனைவி திருமதி நா. புவனேஸ்வரி என்பவருக்கு கருணை அடிப்படையில் பணிவாய்ப்பு வழங்கும் கோரிக்கையை அரசு கருணையுடன் பரிசீலித்து, மறைந்த காவலர் திரு. நாகரத்தினம் என்பவரின் மனைவி திருமதி நா. புவனேஸ்வரி என்பவருக்கு சிறப்பு நிகழ்வாக கருணை அடிப்படையில் ஓவிய ஆசிரியையாக நியமனம் வழங்க ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.**

**இன்று (5.07.2010) தலைமைச் செயலகத்தில், மறைந்த காவலர் திரு.நாகரத்தினம் மனைவி திருமதி நா. புவனேஸ்வரி என்பவருக்கு, விருதுநகர் மாவட்டத்தில் உள்ள கிருஷ்ணன்கோவில் – அரசு மேல்நிலைப் பள்ளியில், ஓவிய ஆசிரியராக பணியாற்ற பணி நியமன ஆணையினை மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்கள் வழங்கினார். இந்நிகழ்வின்போது, மாண்புமிகு பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக்கல்வித் துறை முதன்மைச்செயலாளர் திரு எம்.குற்றாலிங்கம் பள்ளிக்கல்வித் துறை இயக்குநர் முனைவர் பெ.பெருமாள்சாமி ஆகியோர் உடனிருந்தனர்.**

* * * * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.